மின்வாரியத்தில் மேலும் அபிவிருத்தி ஏற்படுவதற்கான ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளைப் பெற்று அபிவிருத்தியை நோக்கிச் செல்ல வேண்டுமென்ற முறையில் என்னுடைய ஆலோசனைகள் சிலவற்றை நான் முன் வைத்திருக்கிறேன். எனக்குப் பின்னால் நாளைய தினம் பேசும்பொழுது தோழர் ரமணி அவர்கள் இன்னும் பல்வேறு விவரங்களையும் அரசுக்கு வழங்குவார்கள் என்று கூறி முடிக்கிறேன்.

3. தகவல் கோரல்—(தொடர்ச்சி)

(ஆ) எதிர்க்கட்சித் தலைவர் செல்லும் பாதையில் வெடிகுண்டு வெடித்துள்ளது என்ற செய்தி.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய மாற்றுத் தலைவரவர்களே, இந்தச் சபையிலே இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு தரவேண்டியவர் நீங்கள்தான். எனவே, உங்களின் கவனத்திற்கு ஒரு விஷயத்தை நான் கொண்டு வர விரும்புகிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் பாத யாத்திரை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர் செல்லுகின்ற வழியில் ஒரு பாலத்திலே நான்கு வெடிகுண்டுகள் வைக்கப்பட்டு, குண்டு வெடித்து, பலபேர்கள் காயப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், அவர் சிவகாசியில் தங்கியிருந்த நேரத்தில், கொலை செய்வது என்ற முயற்சியில் ஈடுபட்ட ஒரு நபர் பிடிக்கப்பட்டிருக்கிறார். சுப்பிரமணியம் என்பது அவர் பெயர்..........(குறுக்கீடு).

திரு. துரைமுருகன்: மாற்றுத் தலைவரவர்களே, உங்கள் அனுமதியுடன் அங்கத்தினர் பேசுகிறார். (கூச்சல்-குழப்பம்)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. துரைமுருகன்: துணைச் சபாநாயகர் அவர்களே, நீங்களே சொல்லுங்கள். திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பி இருக்கிறார்கள், மாற்றுத் தலைவர் அவர்கள் அவருக்கு அனுமதி தந்துள்ளார்கள். அது முக்கியமான பிரச்னை. அந்த பிரச்னையைக் கேட்டுவிட்டு நீங்கள் தீர்ப்புச் சொல்லுங்கள், அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இடையில் அவரது பேச்சை தடை செய்யக் கூடாது.

(இரவு 6.50)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதத்தை ஒட்டிய பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றால் பரவாயில்லை (கூச்சல்—குழப்பம்) நடைபெற்றுக்கொண்டிருக்கிற விவாதத்தை ஒட்டித்தான்

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நீங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப முடியும். அவையிலே இருக்கிற உறுப்பினர்கள், வெளியிலே நடப்பதைப் பற்றி இங்கே எழுப்ப முடியாது. (கூச்சல்—குழப்பம்).

திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கானும் துரைமுருகனும் எழுப்பியிருப்பது மிகவும் முக்கியமான பிரச்னை தான். அதில் எந்தவிதமான கருத்து வேற்றுமையும் இருக்கக் கூடாது என்று நான் கருதுகிறேன். காரணம், எதிர்க்கட்சித் தலைவர் போயிருக்கின்ற பாதையிலே வெடிகுண்டு வெடித்திருக்கின்றது என்ற செய்தி அதிர்ச்சி தரக்கூடியதுதான். அதைப் பற்றி அரசாங்கத்திடம் ஏதாவது தகவல் இருக்குமானால் தெரிவிக்கலாம். அமைச்சரிடம் ஏதாவது தகவல் இருக்குமானால் தெரிவிக்கலாம். (கூச்சல்—குழப்பம்.)

திரு. துரைமுருகன்: எங்கள் தலைவருடைய உயிருக்கு ஆபத்து என்றால் எங்களுக்குப் பதட்டம் இருக்காதா? ஒரு எதிர்க்கட்சித் தலைவருக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்றால், அது குறித்து அரசாங்கத்திலே ஏதாவது விவரம் தெரியுமா? அமைச்சர் உட்கார்ந்துகொண்டு இருக்கிறார்கள். அவராவது தகவல் அறிந்து சொல்கிறேன் என்று சொல்லட்டும். (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரியும் தற்போது மின்வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் குறிப்பிடுவது என்ன விவரம் என்றே தெரியவில்லை. நான் ஏதாவது சொல்ல, பின்னர் அமைச்சர் அவைக்குத் தவறான தகவலைத் தந்தார் என்று அவர்கள் என் மேலேயே உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வருவார்கள். என்னை ஏன் இந்த வம்பில் மாட்ட வைக்கிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது இன்பர்மேஷன் இல்லை, நாளைக்கு விசாரித்துத் தருகிறேன் என்று சொல்லட்டும் நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எனக்குத் தகவல் வந்தால் உங்களுக்கு அதைத் தெரியப்படுத்துவேன்.

8 தமிழ்நாடு மின் வாரியத்தின் நிதிநிலை அறிக்கை.—
விவாதம் (தொடர்ச்சி)

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மின்வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.